



வேலூர் மாவட்டத்தில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.4.2026) காலை அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளைச் சந்தித்து கே.வி. குப்பம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திருமதி ராஜேஸ்வரிக்கு வாக்கு சேகரித்தார். உடன் வேலூர் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், வேலூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் ஏ.பி. நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டத்தில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.4.2026) காலை அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளைச் சந்தித்து கே.வி. குப்பம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திருமதி ராஜேஸ்வரிக்கு வாக்கு சேகரித்தார். உடன் வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், வேலூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் ஏ.பி. நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.

### ரூ.8000 கூப்பனில் என்ன பொருள் வாங்கலாம்?

# தேர்தலுக்கு முன்பே Voting தொடங்கியாச்சு!

### பயனாளியின் இல்லத்திற்கு நேரில் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஏப். 16 -**

**"ரூ.8000 கூப்பனில் என்ன பொருள் வாங்கலாம், எந்தக் கடையில் வாங்கலாம் என்று தேர்தலுக்கு முன்பே Voting தொடங்கியாச்சு" என்று முதல்வர் , கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

இன்று, கே.வி.குப்பம் தொகுதியில் காலைப் பரப்புரையின் போது, கலைஞர் கனவு இல்லம் திட்டப் பயனாளி ஒருவரின் வீட்டுக்கு, அவரது அன்பான அழைப்பை ஏற்றுச் சென்றேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திலும் அந்தச் சகோதரி மாதம் ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார். அவரது குழந்தைகளும் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தில் பயன டைவதாகச் சொல்லி மகிழ்ந்தார்.



"அடுத்து, இல்லத்தரசி 8,000 ரூபாய் கூப்பனில் என்ன வாங்கப் போகிறீர்கள்?" என அவரிடம் கேட்டேன்.

2026 தேர்தல் Votingக்கு முன்பாகவே, இல்லத்தரசி 8,000 ரூபாய் கூப்பனில் வீட்டுக்கு என்ன பொருள் வாங்கலாம்? எந்தக் கடையில் வாங்கலாம்? என்ற Voting தொடங்கியாச்சு.

தமிழ்நாடு முழுக்க குடும்பங்களில் இப்போது இந்த 'டிஸ்கஷன் 'தான் ஓடுகிறது.

**பெண்கள்தான் எப்பவுமே வெல்லணும்!**

வீட்டுக்குத் தேவையான எந்தப் பொருளையும் நீங்க வாங்கிக்கலாம். ஆனா, அது முழுக்க முழுக்க என் சகோதரிகளின் 'choice'ஆகத்தான் இருக்கணும். அவர்கள்தான் 'இல்லத்து அரசிகள்', 'குடும்பத் தலைவிகள்'!

2026 Votingஇல் "தமிழ்நாடா அணியா டெல்லி அணியா?"என்று நான் கேட்கும்போது தமிழ்நாடு அணி என அனைவரும் சொல்வ தைப் போல, இல்லத்தரசி டிஸ்க ஷனில் வீட்டில் அனைவரும் 'பெண்கள்தான்' எனச் சொல்லணும், பெண்கள்தான் எப்பவுமே வெல்லணும்!

#VoteForDMK #வெல்வோம்_ ஒன்றாக

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# பெண்களுக்கு நிறைய திட்டங்களை செய்திருக்கிறார்! உண்மையில் முதல்வர்தான் எனக்கு தெய்வம்!

## 'கலைஞர் கனவு இல்லம்'- 'மகளிர் உரிமைத் தொகைதிட்ட' த்தில் பயன் பெற்ற பெண் உருக்கம்!

**வேலூர், ஏப். 16 -**

**வேலூர் மாவட்டம்,கே.வி.குப்பம் தொகுதியில் கலைஞர் கனவு இல்லம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன் பெற்ற பெண் ஒருவர் அளித்த பேட்டி சமூக வலைத ளத்தில் வைரலாகி வருகிறது.**

அதில்,அவர்,முதல்வர் அவர்கள், பெண்களுக்கு நிறைய திட்டங்களை செய்திருக்கிறார். உண்மையில் அவர் தான் எனக்கு தெய்வம் என உருக்க முடன் குறிப்பிட்டுள்ளார்.

அப் பெண் பயனாளி அளித்த பேட்டி யில் கூறியிருப்பதாவது:

என் கணவர் பெயர் ஜெயசீலன். எனக்கு இரண்டு பிள்ளைகள். மூத்த பிள்ளை 5ஆம் வகுப்பும்,இளையப் பிள்ளை 1ஆம் வகுப்பும் படிக்கின்றனர். நான் குடும்பத் தலைவியாக உள்ளேன். எனது கணவர் கூலி வேலைத்தான் செய்கிறார். வாரத்தில் இரண்டு, மூன்று



நாளைக்குத்தான் வேலைக்குச் செல் வார்.

இந்த வருமானத்தை வைத்துக் கொண்டுதான் குடும்பத்தில் வாழ்ந்து வருகிறோம்.

வீடே இல்லாமல்தான் இருந்தோம். வீட்டிற்காக எழுதி கொடுத்து,கலைஞர் கனவு இல்லம் மூலமாக,முதல்வர் ஸ்டாலின் ஐயா அவர்கள் மூலம் எனக்கு வீடு கிடைத்தது. ஒரு ஆண்டாக மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகி றோம்.

மேலும் அவர், கலைஞர் மகளிர் தொகை கொடுத்தார் அல்லவா,அதிலே யும் தொடர்ந்து மாதாமாதம் எனக்கு ரூ.1000 வருகிறது.

முதல்வர் அவர்கள் உங்கள் இல்லத் திற்கு வருகை தந்தது குறித்து செய்தியா ளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அந்த பெண் பயனாளி, முதல்வர் அவர் கள் வருகை தருவதை பற்றி சொன் னார்கள். ஆனால் அதை உறுதியாக நாங்கள் நம்பவில்லை. அப்படியே வந் தாலும் வெளியிலேயே இருந்து பார்த்து விட்டு செல்வார்கள். என்று நினைத்தேன்.

ஆனால் அவரை நாங்கள் பார்த்தது மிகவும் மகிழ்ச்சி. அவர் வந்ததும் மிக்க மகிழ்ச்சி. அவரால்தான் நான் இந்த வீடு வாசலை கட்டியதை நினைத்து பெருமை யாக கருதுகிறேன்.




பிள்ளைகளுக்கு பள்ளிகளில் முதல மைச்சரின் காலை உணவு வழங்குகி றார்கள் இல்லையா. இதை ஆரம்பித்தது ரொம்ப ரொம்ப உதவியாக இருக்கிறது.

முதல்வர் அவர்கள், நீங்கள் என்ன செய்கிறீர்கள். உங்கள் கணவர் என்ன செய்கிறார். பிள்ளைகள் நல்லா படிக்கி றார்களா? பிள்ளைகள் காலை உணவு திட்டத்தில் சாப்பிடுகிறார்களா? இந்த வீடு கட்டியது உங்களுக்கு எந்த வகையில் உதவியாக இருக்கிறது.

ரூ.8000 கூப்பன் தருவேன். உங்க ளுக்கு பிரிட்ஜ், மிக்சி, வாசிங் மிஷின் வேண்டுமா என்று கேட்டார்கள். நான் வாஷிங் மிஷின் வாங்கிக் கொள்வேன் சார் என்று கூறினேன். எதுவாக இருந்தாலும் தைரியமாக கேளுங் கள். நான் 8000 ரூபாய் கூப்பன் தருகி றேன். அதை பயன் படுத்திக் கொள்ளுங்கள் என்றார்.

மக்கள் மத்தியில் பார்த்தால், அவரை தெய்வமாகத்தான் நான் பார்க்கிறேன். உண்மையில் அவரை முதல்வர் என்று சொல்வதை விட கடவுள் என்று சொல்வதுதான் உண்மை.

ஏழைப் பெண்களுக்கு, ஏழை மக்க ளுக்கு எவ்வளவோ நல உதவி செய்தி ருக்கிறார்.

உண்மையில் அப்பா, அம்மாவை விட தெய்வமாக அவரை நான் பார்க்கி றேன்.

இவ்வாறு அப் பேட்டியில் பெண் பயனாளி குறிப்பிட்டுள்ளார்.



## ஸ்டாலின் ஆட்சியில், வடக்கின் வஞ்சகங்களை மீறி தமிழ்நாடு வளர்ந்து, நாட்டிலேயே முதன்மை மாநிலம். அடிமைகளைச் சேர்த்துக் கொண்டு ஆபத்தை ஏற்படுத்த வடக்கு எத்தனிக்கிறது. விழிப்புடன் இருந்து ஆபத்தின் வேரறுப்போம்! ஸ்டாலின் வெல்லட்டும்!